Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | பங்குனி –28 | 10–04–2004 | சனிக்கிழமை | ஓசை –52

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(சி-9292) 077-6059677

# மட்டு. அம்பாறை மக்களையும் போராளிகளையும் மீட்டெடுக்கப் புலிகளின் நடவடிக்கை ஆரம்பம்!

### வாகரையின் பெரும்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில்

**விடுதலைப்புலிகள் இயக்கம் கருணாவின் பிடியில் இருந்து கிழக்கு மக்களையும், போராளிகளையும் விடுவிக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாகவும், இதன் ஒரு கட்டமாக திருமலை தெற்கிலுள்ள வெருகல் ஆற்றைக்கடந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் வடபகுதிக்குள் பிரவேசித்துள்ளதாகவும் இணையதள தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இது குறித்து தகவல் வெளியிட்டுவரும் இணையதளங்கள் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் விடுதலைப்புலிகள் தமது நகர்வுகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கின்றன.

இத் தாக்குதல்களில் வாகரைப் பிரதேசத்திற்கான தளபதியாக கருணாவினால் நியமிக்கப்பட்ட ஜெயம் மற்றும் பாரதிதாசன் ஆகியோர் படுகாயம் அடைந்துள்ளதாகவும், கருணாவிற்கு நெருக்கமான பிள்ளையான் என்பவர் பயணம்செய்த வாகனம் கண்ணிவெடியில் சிக்கியதில் அவர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கருணா குழுவைச்சேர்ந்த காயமடைந்தோர் மட்டு. வாழைச்சேனை மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இதேவேளை

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.ம.சு.மு அரசாங்கத்திற்கு ஹெல உறுமய ஆதரவு வழங்கும்

புதிய அரசொன்றை அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவு வழங்கியுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய அறிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவை சேர்ந்த எல்லாவல மேதானந்த தேரர் நேற்று முன்தினமிரவு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து பேசிய போது இந்த ஆதரவை வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

நீண்ட நேரமாக சனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சின் பின்னர் இந்த தீர்மானத்தை எடுத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேசமயம் ஹெல உறுமயவின் சார்பில் தெரிவான பிக்குமார்கள் நேற்று முற்பகல் தலதா மாளிகையில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அங்கிருந்த ஊடகவியலாளாகருக்கு கருத்து தெரிவித்த மேதானந்த தேரர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் கூட்டமைக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

-சந்திரிகாவின் பணிப்பையடுத்து-

## முப்படைத்தளபதிகளும் மட்டக்களப்புக்கு சென்றனர்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண நிலை தொடர்பாக முப்படைத்தளபதிகளும் நேற்று மட்டக்களப்புக்கு சென்று ஆராய்ந்துள்ளனர் சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க கிழக்கு மாகாண நிலை தொடர்பாகத் தமக்கு விரிவான அறிக்கை வழங்குமாறு முப்படைத் தளபதிகளையும் பணித்ததையடுத்து மட்டக்களப்புக்குச் சென்ற இவர்கள், அங்குள்ள சிறிலங்காப் படைத் தளபதிகளுடன் நிலமை குறித்து ஆராய்ந்து கொழும்பு திரும்பியுள்ளனர்.

## மட்டு- அம்பாறை பா. உ. களை ராணுவம் அத்துமீறி அழைத்துச் சென்றது

### - மாவை சேனாதிராசா பா.உ.தெரிவிப்பு

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தின் வேளையில் இராணுவம் அத்துமீறி அழைத்துச்சென்றது என தமிழரசுக் கட்சி செயலாளர் மாவைசேனாதிராசா தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டியதற்கு முன்னர் செய்ய வேண்டிய சில கடமைகள் இருந்த படியால் தொடர்ந்தும் அமைக்க இருக்கின்ற அரசாங்கம் அல்லது எதிர்கட்சிகளுடன் நாங்கள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகின்ற சந்தர்ப்பம் ஏற்படுமாக இருந்தால் நாங்கள் மட்டக்களப்பு, அம்பாறையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுடன் சேர்ந்து அதற்குரிய கருத்துக்களை பரிமாறி தீர்மானம் எடுக்க வேண்டும் என்று நாங்கள் பேசியபோது அவர்கள் எங்களுடன் தங்கிருந்து பேசுவதற்கு ஆயத்தம் என்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால்,

அங்கு இருந்து அவர்களை அழைத்து வந்த இராணுவம் அவர்களை உடனடியாக அழைத்துச் சென்று மட்டக்களப்பில் விடுவதுதான் தமக்கு கொடுக்கப்பட்ட கட்டளை என்றும் இரண்டு நாட்களாகிவிட்டன. தாங்கள் போக வேண்டும் என்ற செய்தியை அவர்களுக்கு அனுப்பியிருந்தார்கள். அப்போது நாங்கள் சொன்னோம். அவர்கள் இங்கேதங்கியிருக்க விரும்பு கின்றார்கள். அவர்களுக்கு பாதுகாப்பு வேண்டாம் என்றும், அவர்கள் உங்களை போகும்படி சொல்லியிருக்கின்றார்கள். பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் அவர்களும் செயலாளர் என்ற முறையில் நானும் அந்தக் கருத்தைஅவர்களுக்கு தெரியப்படுத்தினோம். அவர்கள் தங்களுக்கு இராணுவத்தளபதி லெப். ஜெனரல் பலகல்லயினுடைய கட்டளை இது தான் என்ற ஒரு கருத்து வந்த பொழுது இரா. சம்பந்தன்

(08.ஆம் பக்கம் பார்க்க)

## வாகரைப் பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்வு

வாகரைப்பகுதியில் நடைபெற்று வரும் மோதல்களையடுத்து அப்பகுதியிலிருந்து பொதுமக்கள் மாங்கேணிப்பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ளதாக தெரியவருகின்றது.

800 குடும்பங்கள் இடம் பெயர்ந்து மாங்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் இவர்கள் தங்கியுள்ளதாகவும் இதே வேளை வெருகல் பகுதியில் 1000 குடும்பங்களும் தங்கியுள்ளதாக இணையச் செய்திகள் தெரிவிக்கின்றன. மாங்கேணியில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு உதவ இலங்கை செஞ்சிலுவைச்சங்கமும் எகெட் நிறுவனமும் இன்று செல்லவுள்ளன.

## புதிய அமைச்சரவை இன்று மாலை பதவியேற்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சரவை இன்று பிற்பகல் 2 மணிக்கு பதவிப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளது.

அமைச்சர்களின் தெரிவு செய்யும் பணிகள் தொடர்ந்தும் இடம் பெறுவதாக சனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஜனதாஸபீரிஸ் தெரிவித்தார். வெளிவந்துள்ள தகவல் சுற்றுலாத்துறை அமைச்சர்- அநுரா பண்டாரநாயக்க வெளிநாடு- லக்ஷ்மன் கதிர்காமர் மின்சக்தி-மங்கல சமரவீர, நிதி- சரத்அமுனுகம, பெருந்தெருக்கள்- ஏ.எல்.அத்தாவுல்லா எனத் தெரியவந்துள்ளது. மொத்தமுள்ள 32 அமைச்சர்களும் அரசால் அனைத்து கூட்டுக்கட்சிகள் மத்தியிலும் பகிரங்கப்படுத்தப் பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் உசார் நிலையில்

மட்டக்களப்பில் இடம்பெற்று வரும் மோதல்களையடுத்து சிறிலங்காப் படையினர் அதிதீவிர உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி எல்லைகளில் நிலை கொண்டுள்ள படையினர் உசார் நிலையில் வைக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்

(08.ஆம் பக்கம் பார்க்க)

## சுட்டுக்கொலை

மட்டு. பனிச்சங்கேணியில் கருணா குழுவினரால் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் இவர் வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு கொல்லப்பட்டவரின் பெயர் விபரம் கிடைக்கப்பெறவில்லை.

## ஐக்கிய தேசிய கட்சியை மறு சீரமைக்கத் தீர்மானம்

ஐக்கிய தேசியக் கட்சியியை மறுசீரமைப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கட்சியின் அதியுயர் பதவிகளை வகித்த சிலரை அதிலிருந்து நீக்கி புதிய பதவிகள் பலவற்றை அறிமுகம் செய்து வைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பான வாராந்த பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தப் பத்திரிகைச் செய்திக் கமைய ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம மற்றும்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் ஜீப் மோதியதில் யாழ்.இல் இரு இளைஞர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

உந்துளியில் வந்த இரு இளைஞர்களை மோதிக் காயப்படுத்திய பொலிஸ் ஜீப்வண்டி அவ்விடத்தில் இருந்து ஓடிமறைந்துள்ளது நேற்று மாலை யாழ். கொட்டடியில் ஆஸ்பத்திரி வீதியில் இடம்பெற்ற இச்சம்பவம்வத்தில் நாவாந்துறையைச் சேர்ந்த மு.பாஸ்கரன் (வயது 21) என்.ராஜ்குமார் (வயது 23) என்ற இருவருமே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது மேற்படி வீதியால் உந்துருளியில் சென்று கொண்டிருந்த இரு இளைஞர்களையும் எதிரே

(08.ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் உள்விவகாரப் பிரச்சினை; இதனைக் கண்காணிக்க முடியாது

### யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் துணைத்தலைவர்

இது விடுதலைப்புலிகளின் உள்விவகாரப் பிரச்சினை. இராணுவம் இதில் சம்பந்தப்படவில்லை. நாங்களும் இதைக் கண்காணிக்க முடியாது. இவ்வாறு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் துணைத்தலைவர் ஹொக்லண்ட் தெரிவித்தார்.

கிழக்கின் நிலமை குறித்து பி.பி.சி.க்கு கருத்துத்தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், மோதல் நடக்கும் பகுதிக்கு நாங்கள் போக முடியாது. போகப்போவதுமில்லை.

எமது கண்காணிப்பாளர்கள் அரச கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இருக்கின்றார்கள். அந்த சண்டை எல்லாமே தற்போதைய நிலவரப்படி கரு

(08.ஆம் பக்கம் பார்க்க)

## இல.யின் சமாதான முயற்சிகளில் இந்தியா நேரடியாகப் பங்கேற்கும்

### -அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சியில் இந்தியா இனிமேல் நேரடியாக பங்கேற்கும் என சிறிலங்காவின் புதிய வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணி அரசால் முன்னெடுக்கப்படவுள்ள சமாதான முயற்சிகளில் இந்தியா நேரடியாக பங்காற்றவுள்ளதாகவும் இதுதொடர்பான வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்ற நிலையில் அதுபற்றி கருத்துக்கள் தம்மால் கூறமுடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(08.ஆம் பக்கம் பார்க்க)

# ஏல விற்பனை

மு.மா.க.தொ.கூ.சங்கங்களின் சமாசத்திற்கு சொந்தமான M.D.90 த.12–0847 இலக்க மோட்டார் சைக்கிள் 23.04.2004ம் திகதி காலை 10மணிக்கு ஏல விற்பனை செய்யப்படும். இதனை சமாசத்தில் 20ஆம் திகதியிலிருந்து பார்வையிடலாம்.

தலைவர்,
மு.மா.க.தொ.கூ.ச.
சமாசம்,
முல்லைத்தீவு. (4070)

# பதவி வெற்றிடம்

**வகுப்புத் தொழிலாளி**

முல்லைமாவட்ட கடற்றொழிலாளர் கூ.ச.சமாசத்திற்கு வகுப்புத் தொழிலாளி 4 பேர் தேவைப்படுவதால் விண்ணப்பங்களைத் தலைவர் க.தொ.கூ.ச.சமாசம் என்ற முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத்தபாலில் சமர்ப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:-23.04.2004**
**சம்பளம்நேரில் பேசித் தீர்க்கப்படும்**

(4069)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி மாவட்டக்கிளை.
அலகுப் பொதுக் கூட்டங்கள் தொடர்பான

# அறிவித்தல்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் புதிய யாப்பின் பிரகாரம் பிரிவுகள் ரீதியாக அலகுகளை அமைப்பதற்கான பொதுக்கூட்டங்கள் எதிர்வரும் 17.04.2004 சனிக்கிழமை 18.04.2004 ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு நாட்களும் கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய பிரிவுகளிலும் 25.04.2004 ஞாயிற்றுக்கிழமை கரைச்சிப் பிரிவிலும் நடைபெறவுள்ளன. கூட்டம் நடைபெறும் இடங்கள், நேரம் என்பன சம்பந்தப்பட்ட பிரிவுகள் மூலம் சகல ஆயுட்கால, தொழிற்படும் உதவும் அங்கத்தவர்களுக்கும் அறிவிக்கப்படும். எனவே அறிவிக்கப்படும் அலகுகளுக்குரிய சகல அங்கத்தவர்களும் இக்கூட்டங்களில் தவறாது பங்குகொண்டு அலகுகள் அமைப்பதற்கு ஒத்துழைப்பு நல்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

"நன்றி"

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்,
கிளிநொச்சி மாவட்டக் கிளை,
கிளிநொச்சி.

க. கணேஸ்
கௌரவ செயலாளர்.

(9441)

## கிளிநொச்சி நகரிலும் நவீன காட்சி அறைகளுடன்

# கதிர் (அமல்) பல் மூக்குக் கண்ணாடி அகம்

AMAL Dentel and Opticcl Warks



கண் பரிசோதித்து நவீன பிரேம்களில் கண்ணாடிகளைப் பொருத்திப் பெற்றுக்கொள்ளவும்.

பிரேம் அற்ற ரிம்பிலஸ் மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

காலநிலைக்கேற்ப கலர் மாறக்கூடிய சண்கிளாஸ் வகைகளைப் பெற்றுக் கொள்ளவும்,

வசீகரமான சங்குப் பற்களை சொந்தப் பற்களுக்கு நிகராக கட்டிக் கொள்ளவும்

மிதப்பு பற்களுக்கு இலகு முறையில் கிளிப் செய்து சீர் செய்து கொள்ளவும்.

உடனே நாடுங்கள்



கிளை:-
பரந்தன் சாலை.
புதுக்குடியிருப்பு.

1-9 தங்ககம் அருகாமை,
A-09 வீதி,
(அரச அதிபர் இல்லம் முன்பாக)
கிளிநொச்சி.

(4363)



# சுயாட்சித் தமிழ் அரசா?
# சுதந்திரத் தமிழ் ஈழமா?
# சிங்கள தேசம் முடிவு செய்யட்டும்!

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேச மக்களிடம் ஓர் அபிப்பிராய வாக்கெடுப்பாகக் கருதி மேற்படி விடயத்துக்கு ஆணையிடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும் கோரியிருந்தது.

அதன் அடிப்படையில் தமிழ்த் தேச மக்கள் 633,654 வாக்குகளை வழங்கி 22 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்து மிகப் பெரிய வெற்றியை வழங்கியமைக்காகவும், யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 257,320 வாக்குகளை வழங்கியமைக்காகவும், எனக்கு (இல.3) 42,191 விருப்பு வாக்குகளை வழங்கியமைக்காகவும் வாக்காளர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

என்னைப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்வதற்குப் பூரண ஆதரவை வழங்கிய அனைவருக்கும் விசேடமாக வடமராட்சிப் பகுதி மக்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளான மரபு வழித் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை ஆகியவற்றிற்காக உழைப்பேன் என்றும், யாழ்ப்பாணம், வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி, தீவகம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் மக்கள் தொடர்பு அலுவலகங்கள் அமைக்கப்பட்டு எனது பணியைத் தொடருவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள சகல கிராமங்களுக்கும் கூடிய விரைவில் நேரில் வந்து நன்றி தெரிவிப்பேன் என்பதையும், மக்களுடைய பணியில் தொடர்ந்து முழுமையாக ஈடுபடுவேன் எனவும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| கைத் தொலைபேசி இலக்கம்:- 0777-729020 657, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். | தொலைபேசி இலக்கம்:- 021-2226097 65, பருத்தித்துறை வீதி. வல்வெட்டித்துறை. | தொலைபேசி இலக்கம்: 021-2263274 44c, சமிட்பிளாட்ஸ். கெப்பிட்டி பொல வீதி. கொழும்பு-05 | 44 c, Summit Feats Keppittipoca Road, Colombo-5. | தொலைபேசி இலக்கம்:- 011-2559644 |

மக்கள் பணியில்,
**எம்.கே. சிவாஜிலிங்கம்,**
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத்தேர்தல் மாவட்டம்.

(சி-9439)

# ஈராக்கில் தொடரும் கிளர்ச்சி குறித்து புஷ்.ரொனிபிளேயருடன் ஆலோசிக்க முடிவு

(வாஷிங்டன்)

**ஈராக்கில் தொடர்ந்து நடக்கும் கிளர்ச்சி தொடர்பாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்இங்கிலாந்துப் பிரதமருடன் ஆலோசனை நடத்தமுடிவு செய்துள்ளார்.**

ஈராக்கில் கடந்த சில தினங்களாக தொடரும் ஷியா முஸ்லிம்களின் கிளர்ச்சி காரணமாக இதுவரை 35 அமெரிக்க கூட்டுப்படையினரும் 200 ஈராக்கியர்களும் பலியாகியுள்ளார்கள்.

ஈராக்கின் இந்த நிலைமை தமக்குக் கவலையளிப்பதாக கூறிய ஜோர்ஜ் புஷ் எதிர்வரும் 16ம் திகதி இங்கிலாந்து பிரதமரை நேரடியாக சந்தித்து ஆலோசனை நடத்துவதாகவுள்ளார்.அதேவேளை அமெரிக்கா எதிர்வரும் யூன் மாதம் 16ம் திகதி ஈராக் ஆட்சியை ஈராக்கியர்களிடம் ஒப்படைக்கும் முயற்சியில் முனைப்புடன் செயற்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப்படைகள் ஈராக்கை கைப்பற்றி ஒருவருடம் பூர்த்தியாகியுள்ள போதும் தற்போது அங்கு ரத்தக் களரியையே கூட்டணிப்படை எதிர்நோக்கி வருகிறது.

கடந்த 48மணித்தியாலத்தில் மட்டும் 6இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

யுத்தம் தொடங்கியதன் பின்னர் ஈராக்கில் பலியான இராணுவத்தினரின் எண்ணிக்கை இதனுடன் 489 ஆக அதிகரித்திருக்கின்றது.

ஆனால் ஈராக்கிலிருந்து தனது துருப்புக்களை வாபஸ்பெறப்போவதில்லை என்று யப்பானியப் பிரதமர் அறிவித்துள்ளார்.

ஈராக்கில் யப்பானிய இராணுவத்தினர் எட்டுப்பேரை ஷியாமுஸ்லிம்கள் பிடித்து வைத்துள்ளதாக கூறப்படுகிறது. யப்பானிய இராணுவத்தை ஈராக்கில் இருந்து திருப்பி அழைக்குமாறு யப்பானில் மாணவர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். இதனையடுத்து தனது படைகளை திரும்பப் பெறுவதில்லை என்று யப்பானிய பிரதமர் அறிவித்துள்ளார்.

அத்துடன் யப்பானியப் பிரஜைகள் மூன்றுபேரை பணயக்கைதிகளாக தடுத்து வைத்திருப்பதாகவும், யப்பானிய இராணுவம் மூன்று நாட்களுக்குள் வாபஸ்பெறாது விட்டால் அவர்களை உயிருடன் கொளுத்தப் போவதாகவும் ஈராக்கிய மற்றொரு குழு எச்சரிக்கை செய்துள்ளது.

பலஸ்தீனர்கள், பிரிட்டன், கனேடியப்பிரஜைகளும் அடங்கலாக பல வெளிநாட்டவர்கள் கடத்தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



ஈராக்கின் பலூஜா நகரில் தனது ஆர்.பி.ஜியை அமெரிக்கப் படையினரை நோக்கி குறிவைக்கும் முகமூடி யணிந்த ஈராக்கிய கிளர்ச்சிவாதி.



பாக்தாத்தில் அமெரிக்க இராணுவத்துக்கு பொருட்களைக் கொண்டு சென்ற வாகனம் தாக்குதலில் தீப்பற்றி எரிவதையும் அருகில் வேகமாக நடந்து செல்லும் ஈராக்கியரையும் காணலாம்.



அல்ஜீரியாவில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் தனது வாக்குச் சீட்டை பெட்டியிலிடும் சனாதிபதி அப்துல்ஸிஸ்பௌட்டப்ளிகா.

# பிரமோஸ் ஏவுகணையை சந்தைக்கு விட முடிவு

(புதுடில்லி)

ஒலியை விடவேகமாக செல்லக் கூடிய பிரமோஸ் ஏவுகணைகளை உலக சந்தையில் விற்பது தொடர்பாக பிரமோஸ்ஏரோஸ்பேஸ் நிறுவனமும், ரஷ்யாவின் ரோசோபரோன் நிறுவனமும் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன.

இந்திய ரஷ்யகூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட நிறுவனம் "பிரமோஸ் ஏரோஸ் பேஸ்" கடந்த 1998 ஆம் ஆண்டு இந்திய ரஷ்ய அரசுகள் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் படி இந்தியஇராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமும் (டி.ஆர்.டி.ஓ) ரஷ்யாவின் அணுவாயுதத்திட்ட ஏவுகணைத் தயாரிப்பில் முன்னணி வகுக்கும் நிறுவனமான என்.பி.ஓ மாஷ்நிஸ்டரோயெனியாவும் இணைந்து ஏரோஸ்பேஸ் நிறுவனத்தை உருவாக்கின. இந்த நிறுவனத்தின் டி.ஆர்.டி.ஓ.விற்கு 50.5 சதவீத பங்குகள் உள்ளன.

ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் தயாரிப்புத்தான் பிரமோஸ் ஏவுகணைகள். ஒலியைவிட வேகமாகச் செல்லக் கூடிய இந்த ஏவுகணைகள் அடுத்த ஆண்டில் இந்தியக் கடற்படையில் சேர்க்கப்படவுள்ளன.

சிட்னி, சிங்கப்பூர், அபுதாபி உட்பட பல சர்வதேச ஆயுத கண்காட்சிகளில் இந்த ஏவுகணைகள் இடம்பெற்றன.

"அமெரிக்காவின்" தோமஹாக் ஏவுகணைகளை விட மூன்று மடங்கு வேகமாகச் செல்லக் கூடியவை பிரமோஸ் ஏவுகணைகள்.


எதிரிகளின் விமானம் தாங்கிக் கப்பல்களை அழிக்க இரண்டு ஏவுகணைகளைச் செலுத்தினால் போதும் என்று ரஷ்ய நிபுணர்கள் கூறியுள்ளார்கள்.

# தேர்தல்பேரணி மீது தாக்குதல் ஜம்மு-காஷ்மீரில் 15 பேர் பலி

ஜம்மு-காஷ்மீரில் தேர்தல் பேரணி மீது நேற்று முன்தினம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 15பேர் உயிரிழந்துள்ளனர். 60பேர் காயமடைந்துள்ளார்கள் 11பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது என்று பொலிஸ்அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்தச் சம்பவத்திற்குக் கடும் கண்டனம் கூறியுள்ள மாநிலமுதல் அமைச்சர் முப்திமுகம்மதுசயீத் இவ்வாறான சம்பவங்களால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் தடைப்படாது என்று கூறியுள்ளார்.

பொதுத் தேர்தல் உறுதியான பாதுகாப்புடன் நடத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.



சிறிநகருக்கு 100 கி.மீ. வடக்கே ஊரி என்ற இடத்தில் நடைபெற்ற தேர்தல் கூட்டம் ஒன்றின் போது ஏற்பட்ட குண்டு வெடிப்பில் பலியானவர்கள்.

# டர்பரிற்கு சர்வதேச படையை அனுப்பும் ஐ.நா. இன் யோசனையை அமெ.நிராகரிப்பு

(லண்டன்)

டர்பரிற்கு சர்வதேசப்படைகளை அனுப்பும் ஐ.நாவின் ஆலோசனையை வாஷிங்டன் நிராகரித்துள்ளது. அரசபடையினரும் அவர்களது ஆதரவுப்படைகளும்டர்பரின் தீவிரவாதக் குழுவினருடன் மோதலில் ஈடுபட்டுள்ளனர்.இம்மோதல்களில் கடந்த ஒருவருடமாக 10ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். டர்பர் அரசபடைகளும் ஆதரவுப் படைகளும் அங்கு அத்துமீறல் கலை நடத்திவருவதை வாஷிங்டன் கண்டித்துள்ளது. இங்கு சுமார் 1,70,000 பேர் அகதிகளாகியுள்ளனர். அங்கு இனச்சுத்திகரிப்பு நடைபெறுவதாகவும் ஐ.நாவும் அதனைக் கண்டிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அப்துல் அஸிஸ் மீண்டும் சனாதிபதி

அல்ஜீரிய மக்கள் அப்துல் அஸிஸ்பௌட்டப்ளிக்கா மீண்டும் சனாதிபதியாக தேர்வு செய்துள்ளார்கள் என்று அவரது பிரச்சார அலுவலகம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் அல்ஜீரியாவில் சனாதிபதி தேர்தல் நடைபெற்றது இந்த தேர்தலிலேயே அப்துல் அஜிஸ் வெற்றி பெற்றுள்ளதாக கூறப்படுகின்றது.

ஆனால் வாக்களிப்பில் முறைகேடுகள் நடந்துள்ளன முறைகேடான வாக்களிப்பைப் பயன்படுத்தி அப்துல் அஜிஸ் சனாதிபதியாகியுள்ளதாக கூறிக்கொள்வதை ஏற்க முடியாது என்று எதிர்கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

முடிவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அப்துல் அஜிஸ் சனாதிபதி என்று அறிவிப்புச் செய்வதையும் ஏற்க முடியாது என்று எதிர்கட்சி வேட்பாளர்குறை கூறியதுடன், எதிர்ப்புக்கூறியுள்ளார்.

இதனால் அல்ஜீரிய அரசியல் சிக்கலை எதிர்நோக்குயுள்ளது.

# மனித உரிமைகளைப் பேண பாக். இடம் கோரிக்கை

## ஜம்மு-காஷ்மீர் விடுதலை அமைப்பு விடுத்தது

ஜம்மு-காஷ்மீரில் பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பிலுள்ள பகுதிகள் மற்றும் இஸ்லாபாத் சட்டவிரோதமாகக் கைப்பற்றிய பகுதிகளிலும் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு வருவதாக ஜம்மு-காஷ்மீர் விடுதலை இயக்கம் பாகிஸ்தான் மீது குற்றம் சாட்டியுள்ளது: இதனால் அம்மக்களின்மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அதற்கு பாகிஸ்தான் அரச முயற்சியும் நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என்றும் அவ் இயக்கம் பாகிஸ்தானிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

# சைப்பிரஸை இணைக்க ஐக்கிய நாடுகள்சபை முயற்சி

கிரேக்க சைப்பிரசும் துருக்கிசைப்பிரசும் இணைவதைத் தடுக்குமாறு இருநாட்டுத் தலைவர்களும் பொது மக்களைக் கேட்டுள்ளனர்.


ஐ.நா செயலர் கொபிஅனான் மேற்படி இருநாடுகளையும் இணைக்கும் வாக்கெடுப்பொன்றை நடத்தத் திட்டமிட்டிருக்கின்றார். இதற் கெதிராகவே வாக்களிக்குமாறு மக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.மேற்படி சைப்பிரஸ் தீவு உள்நாட்டுக் கலகம் ஒன்றின் மூலம் 1974ம் ஆண்டு துருக்கி, கிரேக்க சைப்பிரஸ்களாகப் பிரிந்து சென்றன.

இவ்விரு பகுதிகளும் இணைவதால் தாம் பாதிக்கப்படுவோம் என துருக்கிய சைப்பிரஸ் கருதுகிறது.



சிறிநகருக்கு 100கி.மீற்றர் தொலைவிலுள்ள ஊரி என்ற இடத்தில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தின் போது நடந்த குண்டு வெடிப்பில் காயமடைந்த ஒருவரைக் கொண்டு செல்லும் பொதுமக்களும்,பொலிசாரும்.

# ஜரோப்பிய பாராளுமன்றம் 2004




*பிரான்ஸ் நாட்டிலுள்ள StraBbourg நகரில் அமைந்துள்ள ஜரோப்பிய பாராளுமன்றத்தில் 15 ஆரம்பகால உறுப்பு நாடுகளும் 10 புதிய நாடுகளுமாக மொத்தம் 25 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இப்பாராளுமன்றம் பற்றிய சிறிய தகவல்.*

**மொத்தம் 732 பேர் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கிறார்கள்.*

**இதில் 321 பேர் மந்திரிசபைக்கு வாக்களிக்கத் தகுதி பெறுவார்கள் (Ministerrat)*


**இப்பாராளுமன்றத்துக்கு ஒவ்வொரு நாட்டிலிருந்தும் தெரிவு செய்யப்படும் பிரதி நிதிகளும் (Member of Parlimant) மந்திரிசபைக்கு வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களின் (Ministerrat) எண்ணிக்கைகளையும் இங்கே காணலாம்.*

*உதாரணம் ஜேர்மனிலிருந்து 99 பிரதிநிதிகள் (MP) தெரிவு செய்யப்படுவார்கள். 29 பேர் (Ministerrat)க்குத் தகுதி பெறுவர்.*

## நாடுகளும் பாராளுமன்றங்களும்

| நாடு | பாராளுமன்றம் |
|---|---|
| அயர்லாந்து | டெய்ல் |
| அமெரிக்கா | காங்கிரஸ் |
| ஆப்கானிஸ்தான் | ஷோரா |
| ஆவுஸ்ரேலியா | பெடரல் பாராளுமன்றம் |
| ஆஸ்திரியா | பெடரல் அசெம்பிளி |
| இங்கிலாந்து | பிரபுக்கள் சபை(மக்கள் சபை) |
| இந்தியா | லோக்சபா,ராஜ்யசபா |
| ஈரான் | மஜ்ஜிலிஸ் |
| இஸ்ரேல் | நெசட் |
| ஜஸ்லாந்து | அல்திங் |
| கனடா | மக்கள் சபை(செனட்) |
| சீனா | தேசிய மக்கள் காங்கிரஸ் |
| சுவிட்சாலர்ந்து | பெடரல் அசெம்பிளி |
| சுவீடன் | ரிக்ஸ்டாட் |
| டென்மார்க் | போல் கெட்டிஸ் |
| தென்னாபிரிக்கா | கவுஸ்ஒப் அசெம்பிளி |
| துருக்கி | கிராண்ட் நஷனல் அசெம்பிளி |
| நோர்வே | ஸ்டோர்டிஸ் |
| நியூஸ்லாந்து | பிரதிநிதி சபை |
| நெதர்லாந்து | ஸ்டேட்ஸ் ஜெனரல் |
| நேபாளம் | தேசிய பஞ்சாயத்து |
| பூட்டான் | சாஸ்டு |
| போலந்து | சீஜிம் |
| மலேசியா | தேவான் ரக்யத்மற்றும் நெதாரா |
| மியான்மார் | பெய்து ஹிட்டாவ் மக்கள்மன்றம் |
| ருமேனியா | தகிராண்ட் நஷனல் அசெம்பிளி |
| ரஷ்யா | சுப்ரீம் சோவித் |
| லிப்பியா | பொதுமக்கள் காங்கிரஸ் |
| ஸ்பெயின் | கோர்டஸ் |
| யப்பான் | டயட் |
| ஜேர்மனி | புண்டஸ்டாக்(கீழ்சபை)<br>புண்டஸ்டாட்(மேல்சபை) |

## எலக்ரோனிக் ஸ்மாட் அடையாள அட்டை




இங்கு காணப்படுவது எலக்ரோனிக் ஸ்மாட் அடையாள அட்டை இது. இதை ஜேர்மன் மைக்ரோசிப் நிறுவனமும் யப்பானிய எலக்ரோனிக் நிறுவனமும் தயாரித்துள்ளன. வழி அனுமதி புகையிரத பயணச்சீட்டு மற்றும் வங்கியிலிருந்து மட்டுப்படுத்தப்பட்ட அளவு பணத்தைப் பெற்றுக் கொள்ள இதைப்பயன்படுத்த முடியும்

## கின்னஸ் சாதனையை எட்டிய மிகச்சிறிய காட்டிஸ்க்




உலகிலே மிகச் சிறிய காட்டிஸ்க்கை யப்பானிய ரோசிபா கம்பனி தயாரித்துள்ளது. இதுமிகச் சிறியதென்றவகையில் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறுவதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இதன் நீளம் 0.85 அங்குலமாகும் இது இவ் வருட இறுதியில் பாவனைக்கு வரும் என்று கூறப்பட்டுள்ளது. தற்போது பாவனையிலுள்ள ஆகச்சிறிய காட்டிஸ்க் இன் நீளம் 1.8 அங்குலமாகும்.

## இசைக்கருவி வாசிக்கும் றோபோ



*யப்பானில் ரொக் கியோ மோட்டார் கம்பனி கொண்டா மற்றும் சொனி நிறுவனங்கள் இயந்திரமனிதர்களின்(றோபோ) தொழில் நுட்பத்தில் போட்டியிட்டுசெயற்படுகின்றன. இந்தப்போட்டியொன்றில் ரொக்கியோ மோட்டார் கம்பனியால் நிறுத்தப்பட்டுள்ள இயந்திர மனிதன்(றோபோ). இது நடனமாடிக்கொண்டு நம்பர் வாசிக்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.*



## தெரிந்துகொள்ள...

- ⇨ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த முதல் இந்தியர் மிகிர்சென்.
- ⇨விஞ்ஞான ஆய்வு கூடங்களில் அபாயத்தைக்குறிக்க பயன்படுத்தப்படும் நிறம் வெளிர் மஞ்சள் நிறமாகும்.
- ⇨உலகின் "ரொட்டிக்கடை" என அழைக்கப்படும் இடம் வட அமெரிக்காவிலுள்ள பிரெயரி எனுமிடமாகும்.
- ⇨ "காற்று நகரம்" என்று அழைக்கப்படுவது சிக்காக்கோ மாநிலம் ஆகும்
- ⇨சீமெந்து 1824 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.
- ⇨கம்பியூட்டரில் மவுசை(Mouse) கண்டுபிடித்தவர் டக்ளஸ் ஏஞ்சல் பார்ட் ஆவார்.
- ⇨45 ஆண்டுகள் கேரளாவைச் சேர்ந்த கே.ஆர் கௌரியம்மாள் எம்.எல்.ஏ ஆக இருந்த பெண்மணியாவார்.
- ⇨பூமிக்கும் சூரியனுக்கும்இடைப்பட்ட தூரம் 9,28,57,000 மைல்கள் ( 15கோடி கிலோமீற்றர்) ஆகும். இந்தத் தூரத்தை ஒரு வானவியல் அலகு( Astro Nomica Unit) என அழைக்கப்படுகின்றது.

# அரசின் கொள்கையைப் பொறுத்தே ஐ.ம.சு.மு.க்கான ஆதரவு குறித்து பரிசீலிக்கப்படும்

## ம.ம.முன்னணியின் தலைவர் சந்திரசேகரன்

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சமாதான முயற்சி தொடர்பில் எத்தகைய கொள்கையினைக் கொண்டுள்ளது என்பதனை தெளிவு படுத்த வேண்டும். இதனை விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொண்டால் சுதந்திர முன்னணிக்கு ஆதரவு தெரிவிப்பது குறித்து பரிசீலிக்க முடியும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் கூறியுள்ளார்.**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினைச் சேர்ந்த பிரமுகர் தமக்கு ஆதரவு வழங்குமாறு தொடர்ந்தும் கோரி வருகின்றார்கள். பலரும் தொடர்பு கொண்டு வருகின்றார்கள். சமாதான முயற்சி தொடர்பில் உங்களது கொள்கையினை வெளிப்படுத்த வேண்டும். இதனை தமிழீழ விடுதலைப்புலிகள் எவ்வாறு ஏற்றுக்கொள்கின்றனர் என்பதைப் பொறுத்தே முடிவெதனையும் எடுக்க முடியும் என்று அவர்களிடம் நான் கூறியுள்ளேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐ.ம.சு.மு. எமக்கு எதனை வழங்கப் போகின்றது என்பதை விட நாட்டின் பிரதான விடயமான சமாதான முயற்சி தொடர்பில் எத்தகைய கொள்கையினைப் பின்பற்றப் போகின்றது என்பதே முக்கியமாகும்.

எனவே சமாதான முயற்சி தொடர்பான கொள்கையினை வெளிக்காட்டிய பின்பே எத்தகைய முடிவினையும் எடுக்க முடியும் என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளேன் என்றும் சந்திரசேகரன் கூறியுள்ளார்.

# ஒன்றே தமிழீழம் என்றே முழங்கு!

காசி ஆனந்தன்

ஒன்றே தமிழீழம் என்றே முழங்கு!
மட்டக்களப்பு யாழ்ப்பாணம் என உடை
பட்டனையேல் பாழ் பட்டனை கண்டாய்...
ஒன்றே தமிழீழம் என்றே முழங்கு!

கண்டிக்கொரு படை காலிக்கொரு படை
உண்டோ தமிழா! சிங்களவர் உணர்வு பார்!
அன்னை கழுத்தை அறுத்தலும் தாய் மண்
தன்னைச் சிதைத்தலும் ஒன்றே! இணைந்து நில்!
எழிலார் தமிழீழ உறுதி துண்டிரண்டாய்
கிழிபட விடாதே.. கிழிபட விடாதே...
ஒன்றே தமிழீழம் என்றே முழங்கு

நாற்றிசை பாரடா மாற்றார் நகை ஒலி
காற்றில் எழுந்தது..கவனி! விழித்தெழு!
பிளவு முழக்கம் இழவு விளைக்கும்!
எழடா ஒரே தாய் மண்ணாய் எழுநீ!
ஒன்றே தமிழீழம் என்றே முழங்கு!

தொல் தமிழ் ஈழம் மீட்கவே புலிகள்
பல்லாயிரவர் கல்லறை ஆயின்...!
மாண்டமா வீரர் கல்லறை மண்ணை
ஏண்டா தமிழீழம் இல்லை என்றதார்?
கல்லறை வீரர் மூடிய கண்முன்
நில்லடாஒன்றாய்! நில்லடா ஒன்றாய்!
ஒன்றே தமிழீழம் என்றே முழங்கு!

மட்டுமா நகரில் சிங்கள மறவர்
எட்டுத் திசையும் உலா எழும் இந்நாள்
உறவுத் தமிழனை யாழ் உடன்பிறப்பை
பிறன் என வெளியே பிடித்துத் தள்ளல்
என்னடா தமிழறம்? எவன் நின் உறவு?
தன்நிலை இழந்தோ தடுமாறு கின்றனை!
ஒன்றே தமிழீழம் என்றே முழங்கு
கண்விழித்திரடா... பகைவர் கால்களின்
முன்போய் விழாதே... முகவரி இழப்பாய்!
வல்லான் பிரபா கரன்சொல் வழிநட!
நில் தமிழினமாய் நின்று நீ நிமிர்...
ஒன்றே தமிழீழம் என்றே முழங்கு!

# ஊடகவியலாளருக்கு கொலை மிரட்டல் மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

பலாலி விமானப்படைத்தளத்தில் வைத்து ஊடகவியலாளர் ஒருவருக்கு படை அதிகாரி ஒருவரால் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கடந்த புதன்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில்இடம்பெற்ற ஆரம்பகட்ட விசாரணைகளில் கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டதாக கூறப்படும் உள்ளூர் செய்தியாளரும்,படைத்தரப்பினரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

படைத்தரப்பின் சார்பில் பலாலி தலைமைப்பீடத்தின் சிவில் நிர்வாக அதிகாரி மற்றும் இராணுவ சட்டத்தரணி ஒருவர் ஆகியோர் அங்கு ஆஜராகியிருந்தனர்.

இதேவேளை நேற்று முன்தினம் முதலாம் கட்டமாக பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் முன்னிலையில் விசாரணைகள் ஆரம்பமாகியுள் ளதாகவும், தொடர்ந்தும் இவ்விசாரணைகள் முன்னெடுக்கப்படுமெனவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி தெரிவித்தார்.

குடாநாட்டிற்கு விஜயம் செய்திருந்த அஸ்கிரியமல்வத்த பீடாதிபதிகளது வருகை தொடர்பான செய்திகளை சேகரிக்கச்சென்ற வேளையிலேயே பலாலி விமானப்படைத் தளத்தில் வைத்து படை அதிகாரி ஒருவரால் ஊடகவியலாளரொருவர் கொலைப் பயமுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (27)

# மூன்று அரச நிறுவனங்களுக்கு புதிய தலைவர்கள் நியமனம்

(கொழும்பு)

அரசாங்க நிறுவனங்கள் மூன்றிற்கு புதிய தலைவர்கள் சனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நியமனங்கள் உடனடியாக அமுலுக்கு வருகின்றன. இந்த நியமனங்களின் படி இலங்கை மின்சார சபைக்குத் தலைவராக ஆனந்தகுலசேகர நியமனம் பெற்றுள்ளார். பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைவராக ஜாலிய மெதகமவும் முதலீட்டுச்சபையின் தலைவராக லலித்டிமெல் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (32)

# தெல்லிப்பளை நூலகத்தின் முழுப்பயனைப்பெற முடியாநிலை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயம் என்றபெயரில் இதுவரைகாலமும் முடக்கிவைக்கப்பட்டிருந்த தெல்லிப்பளை பொதுநூலகம் மற்றும் தெல்லிப்பளை உபதபாலகம் என்பவற்றை மீள இயக்குவதற்கு படையினர்அனுமதி வழங்கியுள்ளனர்.

மேற்படி இரு ஸ்தாபனங்களும் படையினரால் கடந்த 14 வருடங்களாக முடக்கிவைக்கப்பட்டுள்ளமையால் மக்கள்படும் துயரங்களைச் சுட்டிக்காட்டி பல்வேறு தரப்பினரும் கோரிக்கைகளை விடுத்து வந்ததைத் தொடர்ந்தே இவ் அனுமதியை படையினர் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து இவை இரண்டையும் புனரமைத்து இயங்கவிடுவதற்கு பலமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் இவை இரண்டும் அமைந்துள்ள சூழல் இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுவதனால் இதனைக் காரணம் காட்டி படையினர் மேற்கொள்ளும் கெடுபிடிகள் இவ்விரு ஸ்தாபனங்களுடாகவும் மக்கள் முழுமையான பயனைப் பெறமுடியாத சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது. (33)

# நுணாவில் தொடக்கம் மறவன் புலவுவரை இராணுவம் மண் அணைகள் அமைப்பு

## மக்கள் ஆட்சேபம்

நுணாவில் தொடக்கம் மறுவன் புலவுவரையிலான கரையோரப்பிரதேசத்தில் மிகநீளமான மண் அணைகளை அமைக்கும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த சிலநாட்களாக இடம் பெற்று வரும் இம்மண் அணை அமைப்புநடவடிக்கைகளுக்காக இப்பகுதிகளில் படையினரால் ஆக்கிரமித்து வைக்கப்பட்டுள்ள தனியார் காணிகளிலேயே மண்தோண்டும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் இப்பகுதிகளில்உள்ள தனியார் காணிகளுள் உள்ள பயன்தரும் மரங்களைத்தறித்தே படையினர் அப்பகுதிகளில் புதிய புதிய காவலரண்களை அமைக்கப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நடவடிக்கைகளால் இப்பகுதியில் உள்ள பயன்தரு நிலப்பரப்புக்களில் மண்தோண்டி எடுக்கப்படுவதால் அவை தரிசு நிலங்களாவதுடன் பயன்தரு மரவளங்களும் அழித்து நாசம் செய்யப்படுவதாக அப்பகுதியைச் சேர்ந்தமக்கள் ஆட்சேபம் தெரிவிக்கின்றனர். (32)

# விடுவிக்கப்பட்ட இந்.மீனவரை சிறி.கடற்படை பொறுப்பேற்கப் பின்னடிப்பு

## மீனவர் தொடர்ந்தும் சிறையில்

இலங்கை கடற்பரப்பினுள் அத்து மீறிப்பிரவேசித்த வேளை உளளூர் மீனவர்களாலும் ,கடற்படையினராலும் பிடிக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள்,யாழ். மேல் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டிருந்தபோதும் அவர்கள் தாயகம் திரும்புவது தாமதமாகுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீண்டகாலமாக யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள்மீது சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்.மேல் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இவ்வழக்கு விசாரணைகள் யாழ். மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு,தண்டனைகளும் விதிக்கப்பட்டிருந்தன எனினும் இவர்கள் தண்டனைக்காலத்தை முன்னதாகவே யாழ். சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்திருந்ததையடுத்து அவர்களை விடுவிக்க நீதவான் அனுமதித்திருந்தார்.

இவ்வாறுவிடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் 59 பேரையும் இலங்கை கடற்படையினர் யாழ். சிறைச்சாலையில் இருந்து பொறுப்பேற்று இலங்கை-இந்திய கடற்பரப்பில் வைத்து,இந்திய கடற்படையிடம் கையளிக்கவும் நீதவான் பணித்திருந்தார்.

எனினும் இதுவரை இலங்கை கடற்படை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிராமையால் அவர்கள் அனைவரும் தொடர்ந்து யாழ்.சிறைச்சாலையிலேயே தங்கியுள்ளனர் இதே வேளை இம்மீனவர்களது படகுகளும், மீன்பிடி உபகரணங்களும் மேல் நீதிமன்ற நீதவானின் பணிப்பின் பிரகாரம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

# எஸ்.பி.திசா நாயக்கவை அடுத்தமாதம் நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.திசாநாயக்கவை அடுத்த மாதம் 7ம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச் சாட்டிலிருந்து எப்படி அவரால் விலக முடிந்தது என்ற விளக்கத்தை நீதிமன்றம் கேட்டிருக்கிறது.

2003-ம் ஆண்டு நவம்பர் மாதம் 3ம் திகதி ஹபராதுவவில் இடம் பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திசா நாயக்க நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் உரையாற்றினார் என்று உலவட்டுணவைச்சேர்ந்த மூன்று பேர் உயர் நீதிமன்றத்திடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

# இரத்தினபுரி, மத்துகம தோட்டத் தொழிலாளர் மீதுஅரச ஆதரவாளர் தாக்கு!

## சந்திரசேகரன் பா.உ.கண்டனம்

இரத்தினபுரி, மத்துகம பகுதிகளில் இருக்கின்ற தோட்டத் தொழிலாளர்கள் மீது அரச ஆதரவாளர்கள் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் சிறிலங்கா சனாதிபதியைக் கோரியுள்ளார்.

தேர்தல் முடிந்ததன் பின்னர் இந்தப் பகுதியிலுள்ள தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்படுவதும் அவர்களின் குடியிருப்புக்கள் சேதமாக்கப்பட்டு வருவதும், தமிழ்ப் பெண்கள்மீதான வன்முறைகளும் நடைபெற்று வருகின்றன. அமைதியான தேர்தல் நடந்து முடிந்ததாக முழு நாடுமே பெருமைப்படும் இந்த நேரத்தில் இப்படியான சம்பவங்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி விடக்கூடாது. இவ்வாறான சம்பவங்கள் தொடருமாயின் முழுத்தமிழர்களின் கசப்புணர்வை தற்போதைய அரசாங்கம் சம்பாதித்துக்கொள்ளும் என்றும் அவர்கடிதம் மூலம் வலியுறுத்தி யுள்ளார். தமிழ் மக்களிற்கு எதிரான இந்தச் சம்பவங்களின் பின்னணியில் தற்போதைய அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் இருப்பதாக அறியமுடிகிறது. உடனடியாக இவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மடு உதவி அரச அதிபர் பணிமனை 'நீர்ப்' திட்டத்தின் கீழ் அமைப்பு

ரணகோச இராணுவ நடவடிக்கை மூலம் முற்றாக சேதமாக்கப்பட்ட மடு உதவி அரச அதிபர் பணிமனை 'நீர்ப்'திட்ட நிதியின் கீழ் 90 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது. இவ் உதவி அரசஅதிபர் பணிமனை தனியார் வீடு ஒன்றில் இடநெருக்கடிக்கு மத்தியிலும் இயங்கி வருகின்றது. (05)

# அன்பான தமிழீழ மக்களே,



நாமெல்லோரும் தேசியத் தலைமையின் கீழ் ஒன்றுபட்டு நிற்கின்றோம்.

விடுதலையை நோக்கிய பயணத்தில் விடுதலைப்புலிகளும் மக்களும் இணைந்தே பயணிக்கின்றார்கள்.

மரபுவழித் தாயகம், சுய நிர்ணயம், தமிழ்த் தேசியம் இவை எல்லாத்தமிழ் மக்களுக்கும் பொதுவான அரசியல் அபிலாசைகள்.

இவற்றை சந்தேகத்துக்கிடமின்றி சர்வதேசத்துக்கு நிருபித்துக் காட்டியுள்ளீர்கள். உங்கள் வாக்குகளால் தெளிவான ஆணையை வழங்கியுள்ளீர்கள். தமிழ்த் தேசியத்தின் கரங்களைப் பலப்படுத்தி விடுதலைப் போராட்டத்தில் நீங்களும் ஒரு பங்காளிகள் என்பதை உலகறியச் செய்துள்ளீர்கள். அதேவேளை பெண்களின் பிரதிநிதி ஒருவரைத் தெரிவு செய்து பெண்களின் பிரச்சினைகளுக்காக பெண் குரல் பாராளுமன்றத்தில் ஒலிப்பதை உறுதி செய்துள்ளீர்கள்.

இவை அனைத்திற்கும் நன்றி கூறி உங்களை அந்நியப்படுத்த நான் விரும்பவில்லை. மாறாக கொள்கையை மதிக்கும் மக்கள் வாழும் நாட்டில் நானும் பிறந்தேன், வளர்ந்தேன், இன்று அவர்களின் ஒரு பிரதிநிதியாக பாராளுமன்றம் செல்கிறேன். என்பதை எண்ணி நான் பெருமைப்படுகின்றேன்.

இராணுவ, சமூக அடக்குமுறைகளால் பெண்கள் வெட்கப்பட்டு, அடங்கி, ஒடுங்கி வாழ்வதும் அவர்களுக்குப் பாதுகாப்பான ஒரு இடம் கிடைக்கும் போது அளவிடமுடியா துணிவுடன் வெளி வந்து அதிசயிக்கத்தக்க திறமைகளை வெளிப்படுத்தி சாதனைகளின் சொந்தக்காரர்களாவதும் நாம் அனுபவத்தில் கண்டுணர்ந்த உண்மை. நான் பாராளுமன்றம் செல்வது அத்தகைய தொரு சாதனையே. ஆனால் அதற்கு உறுதுணையாக நின்றுழைத்த நீங்கள்தான் அதன் சாதனையாளர்கள்.

பெண் விடுதலை தாயக விடுதலையுடன் பின்னிப் பிணைந்தது. பெண்கள் துணிவுடன் நிமிர்ந் தெழ எமது தேசத்தின் விடுதலை விரைவுபடுத்தப்படும். அவ்வாறு உருவாகும் தேசத்தில் உற்சாகமான பெண்கள் ஆண்களுடன் இணைந்து எமது தேசத்தை உலகம் வியக்கும் வண்ணம் கட்டியெழுப்ப வேண்டும் என்பது தான் எனது கனவு.

பெண்களைப் பயிற்றுவித்து செயற்திறன் மிக்க பெண் தேசநிர்மாணிகளை உருவாக்குவதே எனது தலையாய பணி. பெண்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளையும், அவர்களுக்கான வளம் மிகுந்த எதிர்காலத்தையும் உருவாக்கும் இப்பணியில் என்னை அர்ப்பணிப்புடன் இணைத்துக் கொள்வேன் என உறுதிகூறுகின்றேன்.

உயர்ந்தவர்கள் நாமெல்லோரும்
உலகத்தாய் வயிற்று மைந்தர்
நசிந்து இனிக் கிடக்கமாட்டோம்
நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்.

(பத்மினி சிதம்பரநாதன்)
இலங்கைத் தமிழரசுக் கட்சி

(சி 9364)

# கணினிப் பயிற்சி புதிய பிரிவு ஆரம்பம்

தமிழீழ மாணவர் அமைப்பின் மல்லாவி மேஜர் முரளி கணினிப் பயிற்சி நிலையத்தில் M.S.office புதிய பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது

- விண்ணப்பப்படிவத்தைகணினி நிலையத்தில் பெற்று பூர்த்திசெய்து கொடுக்கவும்.(விண்ணப்பப்படிவம்மட்டுப்படுத்தப்பட்டுள்ளது)
- க.பொ.த சாதாரணதர பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், தொழில்புரிபவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- நேர்முகத் தேர்வு 22.04.2004 வியாழன் அன்று பி.ப 3.00 மணிக்கு கணினி நிலையத்தில் நடைபெறும்.
- மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டது.
- 2004 உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பரீட்சை முடிந்ததும் புதிய பிரிவு ஆரம்பிக்கப்படும்.

மேஜர் முரளி கணினிநிலையம்,
23D,யோகபுரம்,
மல்லாவி.
(பழைய U.N.H.C.R)அலுவலகம்.

(சி.9352)

# பதவி வெற்றிடம்

## முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்-முல்லைத்தீவு

எமது சமாசத்தால் பார ஊர்தி சாரதிக்கான வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு பின்வரும் தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

***விண்ணப்பங்கள் 2004.04.23 க்குமுன்னர் பதிவு அஞ்சலில் அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.***

### தகைமை

01 பார ஊர்தி சாரதி பதவி கு.இல 21.2.13

02 8ம் வகுப்பு சித்தியுடன் பேருந்து பார ஊர்தி, பெட்டியுடன் உழவு இயந்திரம் ஓட்டுனர் உரிமம் பெற்றிருப்பவராகவும் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

03 வயது 18 – 45 மேற்படாதவாறு இருத்தல்வேண்டும்.

தற்போது கடமைபுரியும்கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்ப ட்டாது.

04 குறைந்தது இரண்டு வருடமாவது இம் மாவட்டத்தில் வசிப்பதை உறுதிப்படுத்தி கிராம அலுவலரின் வதிவிட சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

05 சிங்களம் பேசத் தெரிந்தவர்களுக்கும் க.தொ.கூ.சங்கங்களின் சமா சத்தின் எல்லைப்பரப்புக்குள் வசிப்பவருக்கும் முன் உரிமை வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:--தலைவர்,மு.மா.க.தொ.கூ.ச
சமாசம்,முல்லைத்தீவு.

(4068)

# 4ஆம் ஆண்டு நினைவலைகள்



மழலையாய் 01 ௨ 06 ௨ 1979

மாவீரராய் 10 ௨ 04 ௨ 2000

## கப்டன் மணியிழை/அருள்விழி

***சோதியா படையணி***

**(கவிதா செல்வநாயகம் – வேலணை யாழ்)**

*ஆயகலை நுட்பம் மிக்க சோதியாய்*
*துலங்கு சுடர் கொடி -வேங்கையாகி*
*நீதிக்கே போரிட்டெம்மை நிமிர்ந்திட*
*வைத்தாய் கவியே*
*நாள்காண்டாயினும் உன் நினைவோடு*
*துதித்து நாம் நின்று எங்கள்*
*சிந்தையில் வணங்குகின்றோம்.*

**இவரோடு காவியமான ஏனைய மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூறுகின்றோம்.**

*இன்று எமதில்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள் உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

கவிஒளி பந்தல் சேவை,
மின் வாரியவீதி,
மல்லாவி.

கப்டன் மணியிழை
குடும்பத்தினர்.

(4427)

மலரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

# தமிழீழ வைப்பகத்தின்


## வியத்தகு வெகுமதிகள்

***அமுதம் சிறார் சேமிப்புக் கணக்கில் 14.04.2004 ஆம் நாளில் உரூபா 10,000/= இற்கு மேற்பட்ட தொகையினை வைப்புச் செய்யும் சிறார்களுக்கு,***





- வைப்புத் தொகையின் 10% உபகாரப்பணம் (BONUS)
- மேலும் பெறுமதிமிக்க விருப்புத் தெரிவுப் பரிசுப்பொதிகள்




தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

(சி-9361)



## சிந்தனைக்கு

மாவீரர்களே உங்கள் தியாகத்தால் எங்கள் தேசியம் உருவாக்கம் பெறுகின்றது; உங்கள் நினைவுகளால் எங்கள் உறுதி வைரம்பெறுகின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.



# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 10 -04-2004



## "செங்கம்பள வரவேற்பு"

யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த ஆனந்தசங்கரிக்கு தமது தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்ற உறுபினர் பதவியை வழங்க ஹெல உறுமய முன்வந்துள்ளது. ஆனந்தசங்கரி இதனை ஏற்றாரே இல்லையோ ஆனந்தசங்கரி பற்றி ஹெல உறுமய கொண்டுள்ள பெருமதிப்பு அவருக்கு இத்தகைய பதவியை வழங்க ஹெல உறுமய முன்வந்தமைக்கு காரணமாகும்.

காட்டிக்கொடுப்போருக்கு பௌத்த சிங்களப்பேரினவாத சக்திகள் செங்கம்பளவரவேற்பு அளிப்பது என்பது புதியதொன்றல்ல தான் இந்தவகையில் வீழ்ந்து விட்ட ஆனந்தசங்கரியை கைதூக்கி விட ஹெலஉறுமய முன்வந்துள்ளமையானது வரலாற்றுச் சற்றுப் புதிதே ஆயினும் அவர் மீது பௌத்த - சிங்களப் பேரினவாதம் கொண்டிருந்த நம்பிக்கையின் வெளிப்பாடே இதுவாகும்.

இந்நிலையில், ஆனந்தசங்கரி இப்பதவியை ஏற்கின்றாரோ இல்லையோ தமிழ்மக்களுக்கு நம்பிக்கைக்குரியவராக நடக்க முடியாதுபோன அவரால் பௌத்த பேரினவாத சக்திகளுக்கு நம்பிக்கைக்கும் பற்றுதலுக்கும் உரியவராக நடக்க முடிந்துள்ளது என்பதேஉண்மைநிலையாகும்.

அதிலும் குறிப்பாக ஹெல உறுமயவின் நம்பிக்கைக்கு தமிழர் ஒருவர் பாத்திரமாவதென்பது இலகுவான காரியமல்ல. ஏனெனில் தமிழ்மக்களுடன் எத்தகைய அதிகாரப் பகிர்விற்கும் உடன்படாத ஒரு அமைப்பு அதுவாகும். விடுதலைப் புலிகளுடன்பேச்சு நடத்தினாலேயே அரசாங்கத்தை கவிழ்த்து விடப்போவதாக மிரட்டிவரும் அமைப்பாகும்.

ஹெல உறுமய இவ்வாறு ஆனந்த சங்கரிக்கு செங்கம்பளம் விரிக்கையில் டக்ளஸ் தேவானந்தாவிற்கு சனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐ.ம.சு முன்னணியும்அதை ஒத்த நடவடிக்கைக்கு தயாராகி வருகின்றது. அதாவது டக்ளசிற்கு அமைச்சுப்பதவி ஒன்றை வழங்கி தமது அணியில் சேர்த்துக் கொள்ள ,முற்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்நடவடிக்கையானது தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மாறானதொரு நடவடிக்கையென்பது அனைவருக்கும் தெரிந்ததொன்றே. ஆயினும் இதனை ஐ.ம.சு.மு கருத்திற்கொள்ளப்போவதில்லை என்பது வெளிப்படையானது. டக்ளசிற்கு ஒரு அமைச்சுப்பதவியை வழங்கி தமிழ் மக்களை அவமதிக்கும் வகையில் அது செயற்பட முற்பட்டுள்ளது.

டக்ளஸ் தேவானந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினராக அறிவிப்புச் செய்யப்பட்டிருக்கலாம். இது நியாயமான முறையில் பெறப்பட்ட ஓர்ஆசனம் அல்லை. சிறிலங்கா அரசின் அனுசரணையுடனும் மோசடிமூலமும் பெறப்பட்டதொன்றாகும். குறிப்பாக சிறிலங்கா இராணுவத்தினதும் சனாதிபதியினதும் அனுசரணை மூலமாகவும் பெறப்பட்டதாகும்.

அதுமட்டுமல்ல, யாழ். தேர்தல் மாவட்டத்தில் ஒரு ஆசனத்தைப் பெறுவதற்கு தேவையான மொத்த வாக்குகளைப் பெற்றுக்கூட டக்ளஸ் உறுப்பினராக வரவில்லை. ஒன்பதாவது ஆசனத்திற்காக எஞ்சிய வாக்குகளில் கூடுதலான வாக்குகள் கிடைக்கப்பெற்றதினால் தெரிவு செய்யப்பட்டவராகும். ஒரு வகையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் வழங்கியகொடை என்று கூடக்கூறலாம். யாழ். மாவட்டத்தில் உள்ள 11 தொகுதிகளில் ஒரு தொகுதியில் தானும் டக்ளசும் வெற்றி பெறமுடியவில்லை என்பதே தேர்தல் முடிவாகும்.

இந்த நிலையில் டக்ளஸ்தேவானந்தாவிற்கு அமைச்சுப் பதவியை வழங்குதல் என்பது தமிழ் மக்களை அவமதிக்கும் செயல் மட்டுமல்ல. சனநாயகத்தையே கேலி செய்யும் நடவடிக்கையுமாகும். இருப்பினும் சிங்களப் பேரினவாத சக்திகள் இவற்றை செய்யாமல் இருந்துவிடப்போவதில்லை. தமிழ்மக்களின் உணர்வுகளுக்கு மாறாக இவர்கள் செயற்படுதல் என்பதே அவர்களின் பொதுவானதொரு பண்பாகும்.

இந்த ரீதியில், துரோகிகளுக்கு சுகமான வாழ்வு தர பௌத்தபேரினவாத சக்திகளும் சிங்கள ஆட்சியாளர்களும் என்றும் தயாராக இருப்பர். ஆனால்இவர்களினால் ஆதரிக்கப்படுகிறவர்கள் தமிழ் மக்களிடம் இருந்து எப்பொழுதும் தொலைவிலேயே இருக்க முடியும். இவர்களை வைத்து மேற்கொள்ளும் எந்த முயற்சியிலும் சிங்களப்பேரினவாதம் எந்த வேளையிலும் வெற்றி பெற்று விடமுடியாது.

# எந்த அரசும் புலிகளுடன்தான் பேச வேண்டும் இதுவே மேல்மாகாண ம.மு.இன் நிலைப்பாடாகும்

## -மனோகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

பலர் பதவிகளுக்காக பேரம் பேசிக்கொண்டிருக்கும் பொழுது நாம் சமாதான இலக்கையே தேடுகின்றோம். புலிகளுடன்தான் எந்தவொரு அரசாங்கமும் பேச வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் செயற்படுகின்றோம். இந்த அடிப்படையில் தான் சனாதிபதி சந்திரிகாவினதும் ஐ.தே.க தலைவர் ரணிலினதும் செய்திகளைப் புலிகளிடம் சேர்ப்பித்தோம். அதேபோல் புலிகளின் செய்திகளையும் பெரும்பான்மைக் கட்சித் தலைவர்களிடம் சேர்ப்பித்தோம்.

இவ்வாறு மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

மேல்மாகாண மக்கள் முன்னணி எந்தவொரு முடிவை எடுத்தாலும் அது சமாதான இலட்சியத்தின் அடிப்படையில் எடுக்கப்படும் பகிரங்க முடிவாகவே இருக்கும் என்றும்,

பல்வேறு சிறுபான்மைக் கட்சித் தலைவர்கள் சுதந்திரக் கூட்டணியுடன் திரைமறைவில் பேச்சுவார்த் தை நடத்துகின்றார்கள். அமைச்சுப் பதவிகளைக் கோரியுள்ளார்கள். இதில் தவறு இருப்பதாக நாம் நினைக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

சமாதான இலட்சியத்தை முன்னெடுப்பதில் பாலமாக செயற்படுவதற்காகவும், கொழும்பு மாவட்ட தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரங்களை வழங்குவதற்காகவும் அமைச்சுப் பதவி பெற்றுக் கொள்ளுமாறு சுதந்திரக் கூட்டணியினரால் எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதில் தனக்குள்ள உறுதிப்பாட்டைத் தெரிவிக்கும் முகமாக சனாதிபதி சந்திரிகா இரு நாட்களுக்கு முன் என்னுடன் தொலைபேசியில் உரையாடினார்.

ஆனால் நாம் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதை விட புதிய அரசாங்கத்துடன் சமாதான இலட்சியத்துக்காக ஒத்துழைப்பையே விரும்புகின்றோம். இதன் அர்த்தம் ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டில் நாம் இருக்கின்றோம் என்பது அல்ல. தேர்தல் பிரச்சாரங்களின் போதும் நாம் எமது தனித்துவத்தை முன்வைத்து மக்கள் முன்னாள் சென்றோம். எந்தவொரு ஐ.தே.க. தலைவரும் எமது கூட்டங்களுக்கு அழைக்கப்படவில்லை. எந்த வொரு ஐ.தே.க. கூட்டங்களுக்கும் நாம் செல்லவில்லை.

ஐக்கிய தேசிய முன்னணி என்ற கூட்டணிக்குள் நாம் செயற்படுகின்றோமே தவிர நாம் ஐக்கிய தேசியக் ்கட்சிக்காரர்கள் அல்ல என்பதை தெளிவாகச் சொல்லி வந்தோம். அத்துடன் ஐ.தே.க. எமக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து நான்கு தமிழ் வேட்பாளர் என்று ஒருவரையும் நிறுத்தி அவருக்கு அளவற்ற நிதிவசதிகளை அளித்து எமது கட்சியின் அரசியல் பலத்தை அழித்துவிடமுனைந்தது.

இத்தகைய செயற்பாடுகளை நாம் மன்னிப்போம். ஆனால் மறக்க மாட்டோம். நான் ஒருதனி மனித எம்.பி அல்ல. எமக்கொரு அங்கீகரிக்கப்பட்ட கட்சி இருக்கின்றது. இந்த அடிப்படையில் கொழும்பு மாவட்ட தமிழ் மக்களின் அரசியல் தலைமையாக நாம் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாலும்சரி ஆளும் கட்சி வரிசையில் இருந்தாலும் சரி உறுதியுடன் செயற்படுவோம். எமது மக்களின் நல்வாழ்வே எமது நோக்கம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# ஜாதிக ஹெல உறுமய ஐ.ம.சு.மு.க்கு ஆதரவு வழங்க வேண்டும்

## பௌத்த உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு

ஐ.ம.சு.மு. அரசாங்கம் அமைப்பதற்கு ஜாதிக ஹெல உறுமய ஆதரவு வழங்க முன்வர வேண்டும் என்றும் அவ்வாறு ஆதரவு வழங்காது விட்டால், நாட்டில் மீண்டும் அராஜகம் தலைதூக்கும் வாய்ப்பு உண்டு என்றும் பௌத்த உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்புக் கூறியுள்ளது.

இது தொடர்பாக அந்த இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில்:-

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ஐ.ம.சு.மு. 105 ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது. இன்னும் 8 ஆசனங்கள் அரசாங்கம் அமைப்பதற்குத் தேவையாகவுள்ளது. புதிதாக உருவெடுத்த ஜாதிக ஹெல உறுமயவிடம் 09 ஆசனங்கள் உள்ளது. இந்நிலையில் ஐ.ம.சு.மு.க்கு ஆதரவு வழங்க ஜாதிக ஹெல உறுமய மறுத்து வருகின்றது. இதன் மூலம் ஆறுமுகம் தொண்டமானை அல்லது ரவூப்ஹக்கீமை நாட வேண்டிய தேவை கூட்டமைப்புக்கு உள்ளது.

# முன்னர்வெளியேறிய பகுதியில் இராணுவம் மீண்டும் நிலையமைப்பு

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ எனும் பிரதேசத்தில் தமது நிலைகளை அகற்றி அப்பகுதியில் மக்களை மீளக்குடியமர அனுமதித்த படையினர் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மீண்டும் தமது நிலைகளைப் பலப்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

மேற்படி பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்புகளை கடந்த கால படையெடுப்பு மூலம் ஆக்கிரமித்து வைத்திருந்த படையினர் மக்கள் தம்மை தம் சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்குமாறு விடுத்து வந்த கோரிக்கைகளுக்கு இணங்க அப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதித்ததுடன் மீள்குடியமர்வுக்கு வசதியாக தமது நிலைகள் சிலவற்றையும் அகற்றியிருந்தனர்.

இதனால் அப்பகுதியில் சென்று மக்கள் மீளக்குடியமரச்சென்றுள்ள நிலையில் அப்பகுதியில் படையினர் மீண்டும் தமது நிலைகளை அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அங்கு குடியேறச் சென்றுள்ளோர்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது. (33)

# பாதுகாப்பு நடவடிக்கை கொழும்பில் அதிகரிப்பு

## -வாகனங்களை மறித்தும் சோதனை

(கொழும்பு)

கொழும்பில் பல பகுதிகளில் மீண்டும் படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டு படையினர் மீண்டும் வாகனங்களை மறித்து சோதனையிடும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மீன்கடை கட்டடத் தொகுதிக்கருகில் உள்ள சோதனைச்சாவடி. புறக்கோட்டை , மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் உள்ள சோதனைசாவடி,தெகிவளை பாலத்துக்கு அருகேயுள்ள சோதனைச்சாவடி உட்படபல இடங்களில் வாகனங்கள் மறிக்கப்பட்டு படையினர் சோதனை செய்து வருகின்றார்கள்.

இதேவேளை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் முன்பாகவும் முக்கிய பகுதிகளிலும் படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

# பாக்.இந். டெஸ்ட் தொடரின் 2 வது போட்டியில் பாக்.வெற்றி

பாகிஸ்தான்-இந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின் 2வது போட்டியில் பாகிஸ்தான் வெற்றிபெற்றுள்ளது.

கடந்த 5ம் திகதி ஆரம்பமான இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணிமுதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன்படி அவ்வணி தனது முதலாவது இன்னிங்சில் சகல விககெட்டுக்களையுமிழந்து 286 ஓட்டங்களைப் பெற்றது. பாகிஸ்தானின் பந்துவீச்சை சமாளிக்க முடியாத இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சை ஆடிய இந்திய அணி முதல் இன்னிங்சைப் போன்றே வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்து இன்னிங்ஸ் தோல்வியை சந்திக்கும் நிலையிலிருந்தன. ஆயினும் இளம் வீரர் பார்த்தில் பட்டேலும் அகர்கரும் சிறப்பாகஆடி இன்னிங்ஸ் தோல்வியை தவிர்த்தனர். அத்துடன் இந்தியா 241 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களை இழந்து அதன்படி 39ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் 1 விக்கெட்டைமட்டும் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது அணியின் முதல் வரிசை வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர் எனினும் யுவராஜ் சிங்கின் சதம் அணியின் எண்ணிக்கையை சற்று உயர்த்தியது.

தொடர்ந்து பாகிஸ்தான் முதலாவது இன்னிங்சை ஆடி 489 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தது. அவ்வணியின் தலைவர் இன்சமாம் உல்ஹக் 118ஓட்டங்களையும் இம்ரான் பர்கத் 101 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

பின்னர் அதன்மூலம் 9 விக்கெட்டினால் பாகிஸ்தான் வென்று 1-1 என்று சமநிலையில் உள்ளது. இப்போட்டியில் 5 விக்கட்டுக்களை வீழ்த்திய பாக்வீரர் உமர்குல் ஆட்டநாயகனானார் தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டி வரும் செவ்வாயன்று ராவல்பிண்டியில் தொடங்கவுள்ளது.

# பாரியளவிலான படைக்கு ஆட்திரட்டல்

## சிறில. பாதுகாப்பு அமைச்சினால் அறிவிப்பு

சனாதிபதி சந்திரிகாவின் கட்டுப்பாட்டில் பாதுகாப்பு அமைச்சு இருக்கும் நிலையில், தென் பகுதியில் இராணுவத்திற்கு ஆட் சேர்ப்பு பாரிய அளவில் முன்னெடுக்கப்படவுள்ளதாக, பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

வெளிநாட்டில் இராணுவப் பயிற்சி, உயர் சம்பளம், ஐக்கியநாடுகள் சமாதானப்படை உட்பட, வெளிநாட்டுப் படைகளில் பணியாற்றும் வாய்ப்பு, சனாதிபதி மாளிகையின் பாது காப்பு உத்தியோகத்தராகத் தெரிவு போன்றன உட்பட, பல கவர்ச்சிகரமான திட்டங்களை முதன்மைப் படுத்தி, நாடுதழுவிய ரீதியில் இராணுவம் மற்றும் விமான, கடற்படைக்கும் ஆட்களைச் சேர்ப்பதற்கு உத்தியோக பூர்வமாக அறிவிப்பு விடுக்கப்பட்டுள் ளது.

மே மாதம் 5ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ள நேர்முகத்தேர்வில் அனைவரும் கலந்து கொள்ளத் தக்க வகையில், பல்வேறு இடங்களிலும் நேர்முகப்பரீட்சை இடம்பெறுவுள்ளது. இதிலே 18ற்கும் 24 வயதிற்கும் உட்பட்ட ஆண்கள், பெண்கள் அனைவரும், மொழி, இன, மத கட்டுப்பாடுகள் இல்லாது கலந்து கொண்டு தொழில்வாய்ப்பைப் பெறலாம் என்றும் அந்த அறிவித்தல் தெரிவிக்கின்றது.

### புலிகளின்..

ணாவின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தான் நடந்து வருகின்றது.

புலிகள் கூட்டுத் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டார்கள் என்றொரு தகவல் வந்திருக்கிறது. இந்த தகவல்கூட அரச படைகள் தரப்பில் இருந்துதான் வந்திருக்கின்றது. இதை நாங்கள் உறுதிப்படுத்த முடி யாது. இது தொடர்பான ஊடகச் செய்திகளை எங்களால் உறுதி செய்ய முடியாது. இதுதான் தற்போதைய நிலவரம்.

நாங்கள் பார்க்காத ஒரு தகவலை, உறுதி செய்ய முடியாத ஒரு தகவலை வைத்து ஒன்றும் செய்ய முடியாது. விடுதலைப்புலிகள் கடல் வழியாக படையணிகளைத் தரையிறக்கியிருந்தால் அது புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிரானதுதான். ஆனால், அதை நாங்கள் உறுதி செய்ய முடியாது.

நாங்கள் கிழக்கு பகுதி நிலவரம் பற்றி அங்கு என்ன நடக்கிறது என்பது பற்றி விசாரணை செய்வோம். ஆனால், அங்கு சண்டை தொடர்ந்தால் நாங்கள் அந்தப் பகுதிக்குச் செல்ல முடியாது. செல்லவும் போவதில்லை. நாம் காத்திருக்க வேண்டியதுதான்.

### ஐ.ம.சு.மு.

காமல் அரசுக்கு பூரண ஆதரவு வழங்குவதாக தெரிவித்தார் ஐ.ம.சு.முன்னணியுடன் கூட்டமைக்காமல் அந்த அரசின் நற்கரியங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க நாங்கள் தீர்மானித்திருக்கின்றோம். இந்தக் கருத்தினை சனாதிபதிக்கு தெரிவிக்கின்றோம் என அவர் கூறினார்.

### இல...

தமிழீழ விடுதலைப்புலிகள் புதிய அரசாங்கத்துடன் பேசுவதற்கான சமிக்கைகளை ஏற்கனவே வெளிப்படுத்தி இருப்பதாகவும் குறிப்பிட்ட அவர் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தையை தமது அரசாங்கம் மிகவிரைவில் ஆரம்பிக்குமெனவும் அவர்நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன் நெருக்கமான தொடர்புகளை பேணுவது குறித்து ஜே.வி.பி.யும் மிகுந்தவிருப்புடன் இருப்பதாகவும் பிராந்திய நாடு என்ற வகையில் இலங்கையின் நலன்களில் பங்குகொள்கின்ற உரிமை இந்தியாவுக்கு அதிகமாக உண்டு எனவும் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்ததுள்ளார்.

ஐக்கியதேசிய முன்னணியால் முன்வைக்கப்பட்டுள்ள இந்தியாவுடனான பாதுகாப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களை தமது அரசு தொடர்ந்து முன்னெடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார்

விடுதலைப்புலிகள் அமைப்புக்குள் ஏற்பட்டிருக்கும் பிரச்சினையை அவர்களின் உள்வீட்டுப்பிரச்சினையாகவே தமது அரசு கருதுவதாக லக்ஷ்மன் கதிர்காமர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் விடுதலைப்புலிகளுடனான சமாதான செயற்பாடுகளில் நோர்வே தொடர்ந்தும் சமாதானத் தூதுவர்களாக செயற்படுவர் எனவும் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.

இதேவேளை புதிய வெளிவிவகார அமைச்சராக பதவியேற்றுக்கொண்டு லக்ஷ்மன் கதிர்காமர் சிறிலங்காவுக்கான இந்திய தூதுவர் நிருபம்சிங் நேற்றுமுன் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

### மட்டு-அம்பாறை...

விடுதலைப்புலிகளின் படையணிகள் வாகரைப்பிரதேசத்தில் கணிசமான பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளதாகவும் கதிரவெளி, வெருகல் பகுதி பூரண கட்டுப்பாட்டில் வந்துள்ளதாகவும் இச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், இப்பிராந்தியத்திற்குப் பொறுப்பாக கருணாவால் நியமிக்கப்பட்டிருந்த அவரது மூத்த சகோதரன் ரெஜி அப்பிராந்தியத்தை விட்டுத் தப்பிஓடியுள்ளதாகவும், அவரின் கீழ் இருந்த 300க்கும் மேற்பட்டோரை விடுதலைப்புலிகள் மீட்டெடுத்துள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

அத்தோடு, வாகரைப் பகுதியில் இருந்து பல மோட்டார்களும், வேறு பல ஆயுதங்களும் புலிகளினால் மீட்கப்பட்டதாகவும் இவ் இணைய தளங்கள் தெரிவிக்கின்றன.

### மட்டு-அம்பாறை பா...

அவர்கள் லெப். ஜெனரல் பலகல்லவுடன் பேசினார். அவர் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் என்ற ஒருவருடைய வேண்டுகோளின்படி தான் இராணுவப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் தான் அவர்கள் செயற்படுகின்றார்கள் என்று சொன்னார் அப்பொழுது தமிழரசுக் கட்சி செயலாளர் இங்கு இருக்கின்றார். நான் பாராளு மன்ற குழுத் தலைவராக இருக்கின்றேன் என்று சம்பந்தன் கூறி அவர்களுடைய பாதுகாப்பை நாங்கள் பொலிசாருடைய அனுசரணையுடன் ஏற்படுத்தலாம். ஆகையால், இராணுவத்தினருடைய பாதுகாப்புத் தேவையில்லை அவர்கள் இப்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களை நீங்கள் விட்டுச் செல்லலாம். நீங்கள் திரும்பிச் செல்லலாம் என்ற பொழுது சென்றவர்கள் திரும்பவும் எங்களுக்கு கட்டளையிடப்பட்டுள்ளது அவர்களை அழைத்து வரும்படி என்று கேட்டபொழுதுதான் இதில் இராணுவத்தினுடைய தலையீடு இருக்கின்றது என்று எங்களுக்குத் தெரிந்தது. அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் தெரிவு செய்யப்பட்டவர்கள் அவர்களுடைய செயலாளராக நான் இருக்கின்றேன். பாராளுமன்றக் குழுத் தலைவராக இரா. சம்பந்தன் இருக்கின்றார்கள். நாங்கள் சொல்வதைக் கேட்டு அப் பா.உ.களின் கருத்தையும் கேட்டு அவர்களுக்கு பாதுகாப்பு வேண்டுமா, இல்லையா என்று தீர்மானிக்க வேண்டியது நாங்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தான் இராணுவத்தினர் அல்ல என்ற கருத்தைத் தான் நாங்கள் சொல்லி யுள்ளோம்.

அதைத் தான் அன்று நாங்கள் லெப். ஜெனரல் பலகல்லேயிடம் நாங்கள் சொல்லியிருந்தோம். இந்த மாதிரியான அத்துமீறிய தலையீடுகள் எங்கள் மீது திணிப்பது தவறு என்று இரா. சம்பந்தன் அவர்கள் கூறியிருந்தார்கள். நாங்கள் பாராளுமன்றம் கூடும்போது ஒரு சபாநாயகரைத் தெரிவு செய்கின்ற பொழுது நாங்கள் அவரைச் சந்தித்து இந்த விடயங்கள் சம்பந்தமாகப் பேசவும் இருக்கின்றோம். ஏனென்றால், பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாவலனாக இருப்பவர் சபாநாயகர்தான் என்ற நிலைமையில் நாங்கள் சபாநாயகருடன் பேசி எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எவ்வாறு பாதுகாப்பு அமைய வேண்டுமென்பது பற்றி நாங்கள் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் அவர்களும் செயலாளர் என்ற வகையில் நானும் அதற்கான ஒழுங்கை நாங்கள் செய்ய வேண்டும் என்று இப்போது தீர்மானித்துள்ளோம் என்றார்.


## விண்ணப்பம் கோரல்

ஈழநாதம் நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. உதவி ஆசிரியர்**

கல்வித்தகைமை:-

I. பல்கலைக் கழகப் பட்டதாரி

*அல்லது*

II. க.பொ.த. உயர்தரத்தில் சித்தியுடன் ஊடகத்துறையில் ஆர்வமுடையோர்

**02. அலுவலக செய்தியாளர்**

கல்வித் தகைமை:-

I. க.பொ.த உயர்தரத்தில் சித்தி.

**03. ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்பாளர்**

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு ஒலிப்பதிவு நாடாவில் இருந்தும் பத்திரிகைகள், சஞ்சிகைகளிலிருந்தும் மொழி பெயர்க்கும் ஆற்றல்.

**04. ஒப்புநோக்குநர்**

கல்வித்தகைமை:-

I. க.பொ.த. உயர்தரத்தில் தமிழ் உட்பட 3 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

*அல்லது*

II. ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் அல்லது முன்னனுபவமுள்ளவர்கள்.

நேர்முகத் தேர்வு:- 10.04.2004, சனிக்கிழமை 10.00 மணிக்கு

இடம் :- முதன்மைச்சாலை கிளிநொச்சி, ஈழநாதம் பணிமனை

குறிப்பு:

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். விண்ணப்பதாரிகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் மேற்குறிப்பிட்ட திகதியில் சமூகம் தரவும்.

பொதுமுகாமையாளர்,
ஈழநாதம்.

(இ)


# தே.பட்டியல் உறுப்பினர்கள் தமிழரசுக் கட்சி அறிவிப்பு

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜோசப்பரராஜசிங்கம், ஈழவேந்தன் ஆகியோரே தேசியப் பட்டியல் பா.உ.களாக நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழரசுக்கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் அனைத்துப் பகுதியிலும் சிங்களவர் வாழ வழியமைப்பேன்

## புதிய பிரதமர் மகிந்தராஜபக்ச

இலங்கையில் அனைத்துப் பகுதியிலும் சிங்கள மக்கள் வாழக்கூடிய சூழலை உருவாக்குவேன் என சிறிலங்காவின்புதிய பிரதம மந்திரியாகப் பதவியேற்றுள்ள மகிந்த ராஜபக்ச அவரது தொகுதியான அம்பாந்தோட்டையில் உரையாற்றும்போதே தெரிவித்துள்ளார்.

கதிர்காமத்தில் அமைந்துள்ள கிரி விகாரையில் வழிபாடுகளில் கலந்து கொண்ட பின்னர், அங்கு குழுமியிருந்த மக்களுக்கு உரையாற்றுகையில், நாட்டின் அனைத்துப் பகுதியிலும் அனைத்து மக்களும் வாழக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்றார்.

அவர் மேலும் உரையாற்றுகை யில்: சிங்கள மக்கள், எந்தப் பகுதியில் வாழ விரும்பினாலும், அவர்கள் சென்று வாழக்கூடிய ஒரு சூழலை உருவாக்குவது அவசியம். சிறிலங்காவின் வரலாறும் நாகரிகமும், அனைத்துப் பாடசாலைகளின் அத்தியாவசிய பாடத்திட்டங்களில் சேர்க்கப்படுவது அவசியம் சிறிலங்காவின் கலாச்சார பாரம்பரியங்கள் பேணப்படுதற்கும் இளைய சமூகத்திற்கு அதை தெளிவுபடுத்துவதற்கும் முக்கிய கவனம் செலுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

### மட்டக்களப்பு

படுகிறது.மட்டக்களப்பு நகரப் பகுதியில் மிக நெருக்கமாக பொலிசாரும் படையினரும் நிறுத்தப்பட்டிருப்பதுடன் அவர்கள் சோதனை நடவடிக்கை களிலும் ஈடுபட்டுள்ளனர்.

### பொலிஸ்..

மிகவேகமாக வந்து கொண்டிருந்த பொலிஸ் ஜீப்வண்டி மோதியதிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது இதனை தொடர்ந்து இவ்விபத்தில் மோசமான காயங்களுக்கு உள்ளான இரு இளைஞர்களையும் அவ்விடத்தில் விட்டு விட்டுச் பொலிஸ் ஜீப்வண்டி தப்பி ஓடியுள்ளது.

பொலிசாரின் இச்செயற்பாடு மனிதாபிமானமோ, பொறுப்புணர்வே அற்ற செயல் என மக்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். (33)

### ஐக்கிய..

செயலாளர் செனரத் கப்புக்கொட்டுவ ஆகியோர் அப்பதவிகளிலிருந்து நீக்கப்படவுள்ளார்கள். அவர்களுக்கு பதிலாக மிலிந்த மொறகொடவுடன், மற்றுமொருவர் நியமிக்கப்படவிருக்கின்றார்.

கட்சியின் தேசிய அமைப்பாளராக எஸ்.பி.திசாநாயக்கவும் தொழிற்சங்க இணைப்பாளராக ராஜித சேனாரட்ணவும் நியமிக்கப்படுவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.


## கண்ணீர் அஞ்சலி

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் திரு. மு. சிவநேசன் கனகரத்தினபுரம் கிராம அலுவலர் அவர்களின் மாமியாரான

**இராமநாதன் கனகம்மா**

அவர்கள் 08-04-2004ஆம் திகதி கற்சிலைமடுவில் காலமாகிய செய்தி கேட்டு துயருறும் திரு. மு.சிவநேசன் குடும்பத்திற்கும் மற்றும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக
உத்தியோகத்தர், நலன்புரிச் சங்கம்.

(4073)

## சாவு அறிவித்தல்

**துரைலிங்கம் லோகேஸ்வரி**
**(ராணி)**

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல: 795 கட்சன் றோட் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட லோகேஸ்வரி (ராணி) 08.04.2004 கொழும்பில் காலமானார். அன்னார் துரைலிங்கத்தின் (துரை) அன்பு மனைவியும் அமரர் சின்னத்தம்பி, பொன்னம்மாவின் அன்பு மகளும், லோகிதா, கஜீபன் ஆகியோரின் பாச மிகுதாயாரும், குமாரவேலு பராசக்தியின் அன்பு மருமகளும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 10-04-2004 சனிக்கிழமை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல:-
கு.பாலு
மைத்துனர்-பாண்டியன்குளம்.

(4429)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.